# அமைச்சர் காரில் பறக்கும் படை சோதனை

அஸ்தினாபுரத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் காரை வெள்ளிக்கிழமை சோதனையிட்ட தேர்தல் பறக்கும் படை அலுவலர்கள்.

**அரியலூர், மார்ச் 29:** அரியலூர் அருகே போக்குவரத்துத் துறை அமைச்சர் சென்ற காரை வெள்ளிக்கிழமை மறித்து தேர்தல் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டனர்.

அரியலூரிலிருந்து ஜெயங்கொண்டம் நோக்கி மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் சென்ற காரை அரியலூரை அடுத்த அஸ்தினாபுரத்தில் வேளாண்மை பொறியியல் துறை உதவிப் பொறியாளர் மகாநதி தலைமையிலான தேர்தல் பறக்கும் படையினர் நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். அப்போது காரில் பொருள்கள், பணம் ஏதும் இல்லாததால் காரை அனுப்பிவைத்தனர்.

# கொள்கைக்காக பாடுபடும் கட்சி பாமக

## மருத்துவர் ச.ராமதாஸ்

**நெய்வேலி,மார்ச்29:** கொள்கைக்காக பாடுபடும் கட்சி பாமக என்று அந்தக் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் கூறினார்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் வெள்ளிக்கிழமை இரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், பங்கேற்ற ராமதாஸ், கடலூர் மக்களவைத் தொகுதி பாமக வேட்பாளர் தங்கர் பச்சானை ஆதரித்து வாக்கு சேகரித்து பேசியதாவது:

உலகமே வியந்து பார்த்து அதிசயிக்கும் மனிதர் பிரதமர் மோடி. தற்போதைய மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று, பிரதமர் மோடி 3-ஆவது முறையாக மீண்டும் பிரதமராக பதவியேற்பார்.

காங்கிரஸ் கொள்கைகள் நாட்டு மக்களுக்கு தேவையில்லாதது எனக் கூறி, அந்தக் கட்சியை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகத் தான் திமுகவை அண்ணா தொடங்கினார். பாமக அன்று முதல் இன்று வரை கொள்கைகளுக்காகவும், அவற்றை நிறைவேற்றவும் தொடர்ந்து பாடுபட்டு வரும் கட்சி. எந்தப் பதவிக்கும் போவதில்லை என்று சத்தியம் செய்து 85 வயது வரை அதைக் காப்பாற்றி வருகிறேன்.

கடலூர் தொகுதி பாமக வேட்பாளராக தங்கர் பச்சானை தேசிய ஜனநாயகக் கூட்டணி களமிறக்கியுள்ளது. இவர் வெற்றி பெற்றால், மாவட்ட வளர்ச்சிக்கு என்ன தேவை என்பதை துல்லியமாக திட்டமிட்டு நிறைவேற்றுவார் என்றார் ச.ராமதாஸ்.

# நான் போட்டியிடாதது தேர்தல் வியூகம்

## கமல்ஹாசன்

ஈரோடு தொகுதி திமுக வேட்பாளர் கே.இ.பிரகாஷை ஆதரித்து பேசுகிறார் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன்.

**ஈரோடு, மார்ச் 29:** தேர்தலில் போட்டியிடாதது தியாகம் அல்ல, தமிழ்நாட்டின் வியூகம் என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் பேசினார்.

மக்களவைத் தேர்தல் பிரசாரத்தை ஈரோட்டில் வெள்ளிக்கிழமை இரவு தொடங்கிய கமல்ஹாசன் , ஈரோடு மக்களவைத் தொகுதி திமுக வேட்பாளர் கே.இ.பிரகாஷை ஆதரித்து திறந்த வேனில் நின்று பேசியதாவது:

கட்சி வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களவையில் உங்கள் குரல் ஒலிக்க வேண்டும் என்பதற்காக வந்துள்ளேன். தேர்தலில் போட்டியிடாமல் தியாகம் செய்து விட்டீர்களே என்று என்னிடம் கேட்கின்றனர். இது தியாகம் அல்ல, தமிழ்நாட்டின் வியூகம்.

வெளிமாநிலங்களில் இருந்து பலர் தமிழகத்துக்கு வேலைக்கு வருகின்றனர். அங்கு வேலை இல்லை. நாம் மத்திய அரசுக்கு கொடுக்கும் வரியில் ஒரு ரூபாய்க்கு 29 பைசாதான் நமக்கு வருகிறது. ஆனால் இங்கு வேலை தேடி வரும் தொழிலாளர்களின் ஊரில் ஒரு ரூபாய் வரி கொடுத்தால் அவர்களுக்கு 7 ரூபாய் கிடைக்கிறது.

தமிழன் தேசிய நீரோட்டத்தில் கலக்க மாட்டான் என்பது பொய். எப்படியாவது நாட்டை பிடிக்க வேண்டும் என்பது வெறி. நாடு காப்பது என்பது வீரம்.

விவசாயிகள் போராட்டத்தை அடக்க ட்ரோன் மூலம் கண்ணீர் புகை குண்டு வீசுகின்றனர். விஞ்ஞானத்தை அதற்கு பயன்படுத்துகின்றனர்; விவசாயத்துக்கு பயன்படுத்தவில்லை.

இந்தி திணிப்புக்கு எதிராக போராடி வெற்றிபெற்று விட்டதாக நினைத்துக் கொண்டு இருந்தேன். ஆனால் மறுபடியும் திணிக்கிறார்கள்.

சாப்பாடு போட்டு பிள்ளைகளை வரவழைத்து கல்வி கற்க வைக்கும் போது, அவர்கள் எங்கே படித்து முன்னேறி விடுவார்களோ என்று அவர்கள் எழுத முடியாத தேர்வுகளை எல்லாம் கொண்டு வந்து திணிக்கிறார்கள்.

உலகத்திலேயே பெட்ரோல் விலை குறைந்தபோது அதை இந்த அரசு லாபத்தில் விற்றுக் கொண்டு இருந்தது. இட ஒதுக்கீட்டை அழிக்க நினைக்கிறார்கள்.

ஆபத்து காலத்தில்கூட வெள்ள நிவாரணம் வழங்கி உதவ மறுக்கிறது மத்திய அரசு. பொதுசிவில் சட்டம் ஓரவஞ்சனை திட்டம். அரசியலும் மதமும் கலந்தால் நாடு உருப்படாமல் போய்விடும் என்பதற்கு ஐரோப்பா கண்டம் பெரிய உதாரணம்.

திமுக அரசு ஏழைகளுக்கான அரசு என்பதை நான் உணர்கிறேன். அது இன்னும் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆதரிக்கிறோம். மக்கள் நீதி மய்யத்தின் குரல் நியாயத்துக்காக ஒலித்துக் கொண்டு இருக்கும் என்றார்.

# மதுபானக் கூடம் இடிந்து 3 பேர் இறப்பு: கேளிக்கை விடுதியின் மேலாளர் கைது

**சென்னை, மார்ச் 29:** சென்னை ஆழ்வார்பேட்டையில் கேளிக்கை விடுதி மதுபானக் கூடம் இடிந்து 3 பேர் இறந்த விபத்து தொடர்பாக அந்த விடுதியின் மேலாளரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

ஆழ்வார்பேட்டை சேமியர்ஸ் சாலையில் செயல்படும் ஒரு தனியார் கேளிக்கை விடுதியில் மதுபானக் கூடத்தின் முதல் தளத்தின் மேற்கூரை வியாழக்கிழமை மாலை திடீரென இடிந்தது. முதல் தளம் இடிந்து விழுந்ததால், தரைத்தளத்தின் மேற்கூரையும் இடிந்து விழுந்தது.

மதுபானக் கூடத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஊழியர்கள் திண்டுக்கல் சைக்ளோன் ராஜ், மணிப்பூர் திருநங்கை லல்லி,மேக்ஸ் ஆகிய 3 பேர் உயிரிழந்தனர்.

மரணத்தை விளைவிக்கும் வகையில் செயல்பட்டதாக அபிராமபுரம் போலீஸார் வழக்குப் பதிந்து , கேளிக்கை விடுதியின் மேலாளர் கோட்டூர்புரத்தைச் சேர்ந்த சதீஷை (35) வெள்ளிக்கிழமை கைது செய்தனர். விடுதி உரிமையாளர் அசோக்குமாரை போலீஸார் தேடுகின்றனர்.

**வல்லுநர் குழு ஆய்வு:** இந்த சம்பவத்தில் மதுபானக் கூடம் பலவீனமான கட்டட அமைப்புகளுடன் இருந்ததால் விபத்து ஏற்பட்டதாகவும், மெட்ரோ ரயில் திட்டத்துக்காக அந்த கேளிக்கை விடுதியின் அருகே சுரங்கப்பாதை அமைக்கப்படுவதால் விபத்து ஏற்பட்டதாகவும் இரு வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

விபத்துக்கான காரணத்தை துல்லியமாக கண்டறிய கோட்டூர்புரம் உதவி ஆணையர் பாரதிராஜன் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் பொதுப் பணித்துறை பொறியாளர்,மாநகராட்சி அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர். வெள்ளிக்கிழமை ஆய்வைத் தொடங்கிய இக்குழுவினர், ஓரிரு நாள்களில் ஆய்வை முடித்து, அறிக்கையை காவல் துறைக்கு அளிக்கும் என கூறப்படுகிறது.

# கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி கலவர வழக்கு: விசாரணை நிலை அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு

**சென்னை, மார்ச் 29:** கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி மாணவி மரணத்தைத் தொடர்ந்து நிகழ்ந்த கலவரம் தொடர்பான வழக்கின் விசாரணை நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய சிறப்பு புலனாய்வு குழுவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கனியாமூரில் உள்ள தனியார் பள்ளி பிளஸ் 2 மாணவி 2022-ஆம் ஆண்டு ஜூலை 13-ஆம் தேதி பள்ளியின் மூன்றாவது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

2022 ஜூலை 17-ஆம் தேதி மாணவி மரணத்துக்கு பள்ளி நிர்வாகம்தான் காரணம் எனக் கூறி, பல்வேறு அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் போராட்டக்காரர்கள், பள்ளிக்குள் நுழைந்து, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை தீ வைத்து எரித்ததுடன், பொருட்களையும் திருடிச் சென்றனர். இந்த கலவரம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது.

**பள்ளித் தாளாளர் கோரிக்கை:** இந்நிலையில், இந்த வழக்கு விசாரணையை வேறு புலன் விசாரணை அமைப்புக்கு மாற்றக் கோரி, பள்ளி தாளாளர் ரவிக்குமார், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

அந்த மனுவில், சம்பவம் நிகழ்ந்து 20 மாதங்கள் கடந்தும், மாணவியின் தாய் மற்றும் வன்முறையை தூண்டியவர்கள் யாரையும் விசாரணை செய்யவில்லை. வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, கலவரம் தொடர்பான வழக்குகளின் விசாரணையை சிறப்பு புலன் விசாரணைக் குழுவிடமிருந்து வேறு விசாரணை அமைப்புக்கு மாற்ற வேண்டும் என மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, கலவரம் தொடர்பான வழக்கின் விசாரணை நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்டார். மேலும், இந்த மனுவுக்கு சிறப்பு புலனாய்வு குழு, சின்ன சேலம் காவல் ஆய்வாளர் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஏப். 22-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

# தமாகா தேர்தல் அறிக்கை நாளை வெளியீடு

**சென்னை, மார்ச் 29:** தமாகா தேர்தல் அறிக்கையை அந்தக் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 31) வெளியிடவுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி அமைத்து, தமாகா 3 தொகுதிகளில் போட்டியிடுகிறது. பாஜக, தமாகா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஜி.கே.வாசன் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். சென்னைக்கு உள்பட்ட தொகுதிகளில் சனிக்கிழமை பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த நிலையில், தமாகாவின் தேர்தல் அறிக்கையை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் ஜி.கே.வாசன் ஞாயிற்றுக்கிழமை வெளியிடவுள்ளார்.

# எல்.முருகன் மீது வழக்கு

**உதகை, மார்ச்29:** தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக நீலகிரி மக்களவை பாஜக வேட்பாளரும், மத்திய இணை அமைச்சருமான எல்.முருகன் மீது தேனாடு கம்பை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மக்களவைத் தொகுதி வேட்பாளர் எல்.முருகன் கடந்த 25-ஆம் தேதி வேட்பு மனுவை தாக்கல் செய்த பின்னர், உதகை அருகே உள்ள கடநாடு கிராமத்துக்கு சென்று அனுமதியின்றி 100-க்கும் மேற்பட்டோருடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தியுள்ளார்.

இது குறித்து தேர்தல் பறக்கும் படை துணை வட்டாட்சியர் தனலட்சுமி தேனாடுகம்பை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்த புகாரின்பேரில், தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக நீலகிரி பாஜக வேட்பாளரான எல்.முருகன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மருத்துவர் பதிவு: புதிய அலுவலகத்தை நாட அறிவுறுத்தல்

**சென்னை, மார்ச் 29:** மருத்துவர் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், புதுப்பிப்பதற்கும் தமிழ்நாடு மருத்துவ கவுன்சிலின் புதிய அலுவலகத்தை நாடுமாறு மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவப் படிப்புகளை நிறைவு செய்தவர்கள் மாநில மருத்துவ கவுன்சிலில் தங்களது சான்றிதழ்களை சமர்ப்பித்து பதிவு செய்ய வேண்டும் என்பது விதி. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மட்டும் அவ்வாறு பதிவு பெற்ற மருத்துவர்கள் 1.25 லட்சம் பேர் உள்ளனர்.

மருத்துவர்கள் மற்றும் அவர்களது சேவையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான அமைப்பாக விளங்கி வரும் தமிழ்நாடு மருத்துவ கவுன்சிலின் அலுவலகம் அரும்பாக்கத்தில் இயங்கி வந்தது.

இந்நிலையில், நிர்வாகக் காரணங்களுக்காக புதிய அலுவலகம் கட்டப்பட்டது. பூந்தமல்லி நெடுஞ்சாலை, புரசைவாக்கத்தில் சிஎஸ்ஐ வெஸ்லி தேவாலயத்துக்கு அருகே கட்டப்பட்ட அந்த அலுவலகம் அண்மையில் திறக்கப்பட்டது.

அதன்படி, வரும் 1-ஆம் தேதி முதல் புதிய முகவரியில் மருத்துவ கவுன்சில் செயல்படும் என்றும், மருத்துவர்கள் பதிவு நடவடிக்கைகளை அங்கு மேற்கொள்ளுமாறும் கவுன்சிலின் பதிவாளர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

# மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகைக்கு சிறப்பு மலை ரயில் சேவை தொடக்கம்

மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகைக்கு வெள்ளிக்கிழமை இயக்கப்பட்ட சிறப்பு மலை ரயில்.

**மேட்டுப்பாளையம், மார்ச்29:** மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகைக்கு சிறப்பு மலை ரயில் சேவை வெள்ளிக்கிழமை முதல் தொடங்கப்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து தினமும் காலை 7.10 மணிக்கு உதகைக்கு மலை ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயிலில் பயணம் செய்ய சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை தொடங்கவுள்ளதால் மலை ரயிலில் பயணம் செய்ய ஏராளமான சுற்றுலாப் பயணிகள் முன்கூட்டியே பதிவு செய்துள்ளனர். இதனால் பலர் மலை ரயிலில் பயணம் செய்ய முடியாமல் காத்திருப்பில் உள்ளனர்.

இதனை கருத்தில் கொண்டு உதகைக்கு சிறப்பு ரயில் இயக்க சேலம் கோட்ட ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டது. இதையடுத்து மார்ச் 29-ஆம் தேதி முதல் ஜூன் 1-ஆம் தேதி வரை மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகைக்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என அறிவித்தது.

அதன்படி மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து உதகைக்கு சிறப்பு மலை ரயில் வெள்ளிக்கிழமை காலை 9.10 மணிக்கு இயக்கப்பட்டது. வாரத்தில் வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் மேட்டுப்பாளையத்தில் இருந்தும், சனி மற்றும் திங்கள்கிழமைகளில் உதகையில் இருந்தும் இந்த சிறப்பு மலை ரயில் இயக்கப்பட உள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

TATA

**டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வணிகப் பூங்கா, கணபத்ராவ் கதம் மார்க், லோயர் பரேல், மும்பை-400013.
கிளை அலுவலகம்: டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்,
1வது தளம், சென்டன்னியல் சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024.

**அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு**

**(கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழ்)**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கீழ்க்காணும் கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர் மற்றும் / அல்லது அன்னாரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் / சட்டப்பூர்வப் பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், பின்வரும் கடன்தாரர்(கள்) மற்றும் கூட்டுக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து நிலுவைத் தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு, டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்., (TCHFL) நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் TCHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" மற்றும் "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் முறையில் 18.04.2024 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித்தொகை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், விற்பனையில் எந்த ஒத்தி வைப்பும் / இடைநிறுத்தமும் இல்லாத நிலையில் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்து / சொத்து E-ஏலத்தின் மூலம் மேற்குறிப்பிட்டபடி 18.04.2024 அன்று பிற்பகல் 2 மணிக்கு விற்பனை செய்யப்படும். E-ஏலத்தில் கலந்து கொள்வதற்குரிய டேவணித்தொகைக்கான கேட்பு வரைவோலை (D.D) அடங்கிய மூடி முத்திரையிட்ட உறையை 16.04.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் TCHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரிடம் சேர்ப்பிக்க வேண்டும். கிளை முகவரி: டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1ஆவது தளம், சென்டன்னியல் சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

"உள்ளது உள்ள இடத்தில்" எனும் முறையில் பின்வரும் கடனீட்டுச் சொத்தின் / அசையாச் சொத்தின் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்க விவரங்களுக்கேற்ப விற்பனை செய்யப்பட உள்ளன.

| வ. எண் | கடன் கணக்கு எண் / கிளை | கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) / சட்ட வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி / ஜாமீன்தாரர்(கள்) பெயர் | கோரிக்கை அறிவிப்பு நாள்படி தொகை | குறைந்த பட்ச விலை | டேவணித் தொகை (EMD) | சுவாதீன வகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10022896 & TCHHF 0404000 1000 67743 | திரு. வெங்கடேசன் K திருமதி V லக்ஷ்மி | ஒப்பந்த எண் 10022896-இன்படி நீங்கள் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை ரூ.8726428/- (ரூபாய் எண்பத்தேழு இலட்சத்து இருபத்தாறாயிரத்து நானூற்று இருபத்தெட்டு மட்டும்) மற்றும் ஒப்பந்த எண் 10022896 & TCHHF0404000100067743- இன்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ரூ.1546253/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து நாற்பத் தாறாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) ........ 16.06.2022 | ரூ. 1,10,00,000/- (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) | ரூ. 11,00,000/- (ரூபாய் பதினொரு இலட்சம் மட்டும்) | நேரடி சுவாதீனம் |

அசையாச் சொத்தின் விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய தரைத்தளம். மேல்கட்டுமானத்தின் பரப்பளவு 1180 சதுர அடி மற்றும் கார் நிறுத்துமிடம் மற்றும் பிரிபடாப்பங்கு 865 சதுர அடி உட்பட நிலத்தின் பரப்பளவான 1732.75 சதுர அடியில் அடங்கியது. இத்துடன் வழி சேர்த்து. சர்வே எண் 90, பிளாக் எண் 39, புலியூர் கிராமம், மனை எண் 8 பாகம், பழைய கதவு எண் 16, புதிய கதவு எண் 168, ரங்கராஜபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை-600624. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: டயனமிக் அபார்ட்மெண்ட்ஸ், தெற்கு: S. லோகநாதன் அவர்களின் சொத்து, கிழக்கு: கதவு எண் 168/1- இல் உள்ள சட்டப்பூர்வ வாரிசு லடிஃப் பாய் அவர்களின் சொத்து, மேற்கு: கதவு எண் 167-இல் உள்ள சட்டப்பூர்வ வாரிசு முருகேசா அவர்களின் சொத்து. அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 49 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 47 அடி 3 அங்குலம், வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 22 அடி 6 அங்குலம், வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 20 அடி 1 அங்குலம். இது கோடம்பாக்கம் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

ஏலத்தில் பொது மக்கள் தங்கள் ஏலப்புள்ளிகளை நேரிடையாகத் தாக்கல் செய்யுமாறு அழைக்கப்படுகிறார்கள். கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) இவ்வறிவிப்பு வெளியானதிலிருந்து 15 நாட்களுக்குள் தங்கள் மொத்த நிலுவைத் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்த இதன் மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தவறினால், அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏல நாளுக்கு முன்னர் மேலே கூறியபடி நிலுவைத்தொகையை வட்டி மற்றும் செலவினங்களுடன் (விற்பனைக்காகும் செலவினம் உட்பட) 'அதிகாரப்பூர்வ அலுவலரிடம்' செலுத்தி விட்டால் அல்லது குறிப்பிட்ட ஈட்டுறுதிக் கடன் தொகையை வட்டி மற்றும் செலவினங்களுடன் செலுத்தியதற்கான அத்தாட்சியை அவர் நிறைவுறும் வகையில் அளித்து விட்டால் e-ஏலமானது நிறுத்தப்படும்.

விற்பனை செய்யப்படும் அசையாச் சொத்தின் மீது எந்த வட்டியையும் பெறவோ பெற முயற்சிக்கவோ நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏலம் கோர இந்த விற்பனையில் எந்த அலுவலரோ இதர நபர்கள் யாருமோ பணியமர்த்தப்படவில்லை.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் கீழான நிபந்தனைகளுக்கும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டது:

குறிப்பு: சொத்துக்களின் E-ஏலமானது http://bankauctions.in/ எனும் இணையமுகப்பில் 18.04.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்புடன் கூடிய தலா 10 நிமிடக் காலநீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: 1. மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையிலானவை. எனினும் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழையோ, முரண்பாடோ, விடுபாடோ இருப்பின் அதற்குக் கீழே கையொப்பமிட்டுள்ளவர் பொறுப்பாக மாட்டார். ஏலப்புள்ளி அல்லது ஏலதாரர் தொடர்பாக ஏதேனும் சிக்கல் எழுப்பப்பட்டால் ஈடு பெற்றுக் கடனளித்தவரின் விருப்புரிமைக்கு இணங்க குறிப்பிட்ட அசையாச் சொத்தானது மீண்டும் ஏலத்துக்கு விடப்படும். 2. சொத்தானது குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது. 3. ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்). 4. சொத்தை வாங்குவதற்காகத் தாக்கல் செய்யப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் மேலே கூறிய டேவணித்தொகைக்கான (EMD) "TATA CAPITAL HOUSING FINANCE LTD" எனும் பெயருக்கு கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை இணைக்கப்பட்டிருக்க வேண்டும். வெற்றி பெறாத ஏலதாரர்களின் கேட்பு வரைவோலைகள் ஏலத்துக்குப் பின்னர் திருப்பி அனுப்பப்படும். NEFT/RTGS/IMPS மூலம் டேவணித் தொகையை (EMD) செலுத்துவதற்காக தயவு செய்து அதிகாரப்பூர் அலுவலரை தொடர்பு கொள்க. 5. உச்சபட்ச ஏலதாரரே வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அதே நேரம், அவர் ஏலம் கோரச் சட்டப்படி தகுதியுள்ளவராகவும் அவரது ஏலத் தொகை குறைந்தபட்ச விலைக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும். கோரப்படும் தொகை போதுமானதாக இல்லை என்பது தெளிவாகத் தெரியும் நிலையில் அதை ஏற்றுக் கொள்வது உகந்ததில்லை என அறிவுறுத்தப்பட்டிருப்பதால் அத்தொகையானது உச்சபட்ச ஏலப்புள்ளியாக இருந்தாலும் ஏற்க மறுப்பதற்கு 'அதிகாரப்பூர்வ அலுவலருக்கு' விருப்புரிமை உண்டு. 6. பதிவு செய்யப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் விற்பனையைத் தள்ளி வைக்க / இடைநிறுத்த 'அதிகாரப்பூர்வ அலுவலருக்கு' விருப்புரிமை உண்டு. 7. அசையாச் சொத்தினை ஆய்வு செய்வதற்கான நாள்: 10.04.2024 அன்று முற்பகல் 11.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இடையில் மற்றும் முன் அனுமதி பெறப்பட வேண்டும். 8. வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிக்கப்பட்டவர், அறிவிக்கப்பட்டவுடன் டேவணித்தொகை உட்பட, வாங்கும் தொகையில் / ஏலத்தொகையில் இருபத்தைந்து விழுக்காட்டை அடுத்த 24 மணி நேரத்துக்குள் 'அதிகாரப்பூர்வ அலுவலரிடம்' செலுத்த வேண்டும். தவறினால் சொத்தானது மீண்டும் ஏலத்துக்கு / தனிப்பட்ட விற்பனைக்குக் கொண்டு வரப்படும். 9. முதல் தொகையை மேற்கூறியபடி செலுத்தி விட்டால், வாங்குபவர் வாங்கும் தொகையில் செலுத்த வேண்டியுள்ள மீதத்தைச் சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட அதே நாளிலோ அல்லது குறிப்பிட்ட நாளிலிருந்து 15ஆம் நாளிலோ அல்லது அதற்கு முன்போ 'அதிகாரப்பூர்வ அலுவலரிடம்' செலுத்த வேண்டும். 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமையாகவோ வேறு ஏதேனும் விடுமுறை நாளாகவோ இருப்பின் 15ஆவது நாளுக்குப் பின்பான முதல் அலுவல் நாளில் செலுத்தலாம். 10. இவற்றுள் எந்தத் தொகையையாவது மேற்கூறிய காலக்கட்டங்களுக்குள் செலுத்தத் தவறினால் சொத்தானது மீண்டும் ஏலத்துக்கு / தனிப்பட்ட விற்பனைக்குக் கொண்டு வரப்படும். மேலும் டேவணித்தொகை உட்பட வைப்புத்தொகைகள் டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்., நிறுவனத்தால் பறிமுதல் செய்யப்படுவதோடு தவறிழைத்த வாங்குநர் சொத்தின் மீதான அனைத்து உரிமைகளையும் இழக்க நேரும். டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்., நிறுவனத்துக்குத் தெரிந்த வரையில் சொத்தின் மீதான வில்லங்க விவரங்கள்: மேலே உள்ள அட்டவணைப்படி. சொத்தின் மீதான உரிமை கோரல்கள் மற்றும் அதன் தன்மையையும் மதிப்பையும் பாதிக்கக்கூடிய தெரிந்த வரையிலான இதர விவரங்கள்: மேலே உள்ள அட்டவணைப்படி. ஆர்வமுள்ள ஏலதாரர் சொத்தின் மீதான சட்டப்படியான பொறுப்புக்கூறல்கள், சொத்து வரி - மின்சாரக் கட்டணம் முதலான நிலுவைகள் உட்பட சொத்தின் வில்லங்கங்கள் குறித்து தாங்களே சொந்தமாக விசாரித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். 12. மேலும் விவரங்களுக்கு அல்லது e-ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ள ஏலதாரர்களுக்கு வழங்கப்படும் இணைய வழிப் பயிற்சிக்கு ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய சேவை வழங்குநர், M/s. 4Closure, பிளாக் எண் 605 A, 6ஆவது தளம், மைத்ரிவனம் வணிக வளாகம், அமீர்பேட்டை, ஐதராபாத் - 500038. ஒருங்கிணைப்பாளர்கள்: திரு. அரிஜித் குமார் தாஸ், 8142000725, 8142000066, 8142000062, மின்னஞ்சல்: arijit@bankauctions.in மற்றும் மின்னஞ்சல்: info@bankauctions.in, அல்லது மணிஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி: Manish.Bansal@tatacapital.com, அதிகாரப்பூர்வ அலுவலரின் கைப்பேசி எண்: 8588983696. உங்கள் கேள்வியை அனுப்ப வாட்சப் எண்: 9999078669. 13. ஏலத்தொகையில் அதிகபட்ச தொகையை வெளியிட்டவர் அத்தொகையில் 1% ஐ TDSஆக அவரே செலுத்த வேண்டும். இது உரிமையாளரின்/கடன்தாரரின் PAN கணக்கில் செலுத்தி அதன் செலுத்துச் சீட்டு (challan) நகலை எமது நிறுவனத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். 14. மேற்கூறிய தகவல்களைக் காண நீங்கள் அணுக வேண்டிய ஈடு பெற்றுக் கடனளித்தவரின் இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பு: http://surl.li/rvvzb. 15. மேலும் அணுக வேண்டிய இணையத்தள இணைப்பு: https://www.tatacapital.com/property-disposal.html

குறிப்பு: குறிப்பிட்ட ஏலச் சேவை வழங்குநர் தவிர இச்சொத்து விற்பனைக்கு / ஏலத்துக்கு வேறு தரகர் / முகவர் யாரையும் TCHFL நியமிக்கவில்லை. ஆர்வமுள்ளோர் இது தொடர்பான அனைத்துக் கேள்விகளுக்கும் விவரங்களுக்கும் கீழே கையொப்பமிட்டுள்ளவரையோ அதிகாரப்பூர்வ அலுவலரையோ மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம்: சென்னை
நாள்: 30.03.2024

ஓம்/-அதிகாரப்பூர்வ அலுவலர்
டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.

**E-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு (பிற்சேர்க்கை - IV A) (விதி 8(6))**

IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு இந்தியா இன்ஃபோலைன் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., என அறியப்பட்டது) (IIFL-HFL) எனும் மனை எண் 98, உத்யோக விகார், கட்டம்-IV, குர்கான்-122015 (அரியானா) எனும் முகவரியில் பெருநிறுவன அலுவலகத்தையும் 3ஆவது தளம், எண் 41, 1ஆவது பிரதான சாலை, CIT நகர், சென்னை-600 032 எனும் முகவரியில் கிளை அலுவலகத்தையும் கொண்டுள்ள நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் விற்பனை, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("சட்டம்") கீழ். IIFL-HFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் (AO) நிறுவனத்தின் நிலுவைத்தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டுக் கீழ்க்காணும் கடன் கணக்கு எண்கள் தொடர்பாக மேற்படி சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை அடுத்துக் கீழ்க்காணும் சொத்தை / சொத்துக்களை "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "திரும்பப் பெறப்படமாட்டாது" எனும் முறையில் விற்பனை செய்யும் உரிமையுடன் சேர்த்து சுவாதீனம் செய்திருந்த நிலையில் விற்பனையானது கீழே கையொப்பமிட்டுள்ளவரால் www.iiflonehome.com எனும் இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள e-ஏலத் தளத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

| கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) | கோரிக்கை அறிவிப்பு நாளும் & தொகையும் | அசையாச் சொத்தின் / கடனீட்டுச் சொத்தின் விவரம் | நேரடி சுவாதீன நாள் | குறைந்தபட்ச விலை |
|---|---|---|---|---|
| 1. திரு. சரவணன் K, 2. திருமதி சங்கரி சரவணன் (வாடிக்கையாளர் எண் 839013) | 22.08.2022 & ரூ.19,34,252/- (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து இருநூற்று ஐம்பத்திரண்டு மட்டும்); ஏல உயர்வுத் தொகை ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) | இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. மனை எண் 145, மொத்தப் பரப்பளவு 600 சதுர அடி, இந்திராஸ் நியூ டவுன், சர்வே எண் 93/15, வட்டம்பாக்கம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர், சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 602105. (கட்டுமானப் பரப்பு 480 சதுர அடி. | 12.03.2024; 05.03.2024 நாளன்படி மொத்த நிலுவைத்தொகை ரூ.29,19,572/- (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்திரண்டு மட்டும்) | ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்); டேவணித்தொகை (EMD) ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) |
| 1. திரு. லக்ஷ்மன் சுப்புலக்ஷ்மி பிரபாகரன் 2. திருமதி மீனா லக்ஷ்மணன் (வாடிக்கையாளர் எண் IL10004973) | 18.02.2020 ரூ.13,90,186/- (ரூபாய் பதின்மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து நூற்று எண்பத்தாறு மட்டும்); ஏல உயர்வுத் தொகை ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) | இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அடுக்கக எண் C312, "விஜய் ராஜாஸ் ஐடியல் ஹோம்ஸ்", மொத்தப் பரப்பளவு 785 சதுர அடி, கூடப்பாக்கம் கிராமம், பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு. | அடையாள சுவாதீனம் 17.07.2020; 05.03.2024 நாளன்படி மொத்த நிலுவைத்தொகை ரூ.18,96,566/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து ஐந்நூற்று அறுபத்தாறு மட்டும்) | ரூ.11,47,000/- (ரூபாய் பதினொரு இலட்சத்து நாற்பத்தேழாயிரம் மட்டும்); டேவணித்தொகை (EMD) ரூ.1,14,700/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினான்காயிரத்து எழுநூறு மட்டும்) |

சொத்து ஆய்வு நாள்: 12.04.2024 அன்று முற்பகல் 1100 மணி முதல் பிற்பகல் 1400 மணி வரை. டேவணித்தொகைக்கான கடைசி நாள்: 15.04.2024 - மாலை 5 மணி. E-ஏல நாளும் நேரமும்: 18.04.2024 அன்று முற்பகல் 1100 மணி முதல் பிற்பகல் 1300 மணி வரை.

பணம் செலுத்தும் முறை:- EMD கட்டணங்களை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். பணம் செலுத்த நீங்கள் https://www.iiflonehome.com பார்வையிடவும் மற்றும் சொத்து/கடனீட்டு சொத்துக்கான இணைப்பு மூலம் பணம் செலுத்த வேண்டும். குறிப்பு: ஒவ்வொரு சொத்துக்கும்/ கடனீட்டு சொத்துக்கும் கட்டண இணைப்பு வேறுபட்டது. நீங்கள் பொது ஏலத்தில் வாங்க உத்தேசித்துள்ள சொத்து/கடனீட்டு சொத்தின் இணைப்பைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்தி கொள்ளவும். பின்வரும் கணக்கு விவரங்களுக்கேற்ப RTGS / NEFT வழியில் செலுத்தப்பட வேண்டும்: a) கணக்கின் பெயர்: IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிட்., b) வங்கியின் பெயர்: ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி, c) கணக்கு எண்: 9902879xxxxx வாடிக்கையாளர் எண். d) IFSC எண்: SCBL0036001, e) வங்கி முகவரி: ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி, 90 M.G. சாலை, கோட்டை, மும்பை - 400001 வாயிலாக தொகையைச் செலுத்தலாம்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. E-ஏலத்தில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள ஏலதாரர்கள் சேவை வழங்குநரின் https://www.iiflonehome.com/ இணையத்தளத்தில் முன்கூட்டியே தங்கள் விவரங்களைப் பதிவு செய்து தாங்கள் உள்நுழைவதற்கான கணக்கு (login account) அதற்குண்டான பயனர் பெயர், கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் "ஒப்பந்தப்புள்ளிப் படிவ"த்தை டேவணித்தொகை (EMD) செலுத்தியதற்கான விவரங்கள், வாடிக்கையாளர் விவர ஆவணங்களின் (KYC) நகல்கள், நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை ஆகியவற்றுடன் சேர்த்து மேற்குறிப்பிட்ட கிளை அலுவலகத்துக்கு அனுப்ப / தாக்கல் செய்ய வேண்டும்.
2. ஏலதாரர்கள் தங்கள் விலைகோரலை "ஏல உயர்வுத் தொகை" எனும் பத்தியில் குறிப்பிட்டுள்ள தொகையின் மடங்குகளில் உயர்த்திக் கோரலாம். ஏலத்தின் கடைசி 5 நிமிடங்களில் ஏலம் கோரப்பட்டால் ஏலம் முடியும் நேரம் தானாகவே 5 நிமிடங்கள் நீட்டிக்கப்பெறும்.
3. வெற்றி பெறும் ஏலதாரர் ஏல விலையில் 25% தொகையை (டேவணித்தொகை உட்பட) அதிகாரப்பூர்வ அலுவலரால் ஏல விலை ஏற்றுக் கொள்ளப்பட்ட 24 மணி நேரத்துக்குள் செலுத்த வேண்டும். எஞ்சிய 75% ஏலத்தொகையானது ஈடு பெற்றுக் கடனளித்தவரால் விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். அனைத்துத் தொகைகளும் மேலே குறிப்பிடப்பட்ட முறையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.
4. சொத்து தொடர்பாக எழும் செஸ் வரி, உரிய முத்திரைத் தீர்வை, கட்டணம் மற்றும் இதர சட்டப்படியான நிலுவைகள் அல்லது இதர நிலுவைகளான நகராட்சி வரி, மின்சாரக் கட்டணங்கள், நில மற்றும் அனைத்து இதர இடைநிகழ் செலவினங்கள், கட்டணங்கள் உட்பட செலவாகும் அனைத்து வரிகளும் விகிதங்களும் வாங்குநரையே சாரும்.
5. ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்து e-ஏல விற்பனை நடைமுறையில் கலந்து கொள்ளும் முன்பு https://iiflonehome.com மற்றும் https://www.iifl.com/home-loans/properties-for-auction ஆகிய இணையத்தளங்களுக்குச் சென்று விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுமாறும் ஏல விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
6. விருப்பமுள்ள ஏலதாரர்கள் மேலும் விவரங்களுக்கும் உதவி நடைமுறை மற்றும் e-ஏலத்துக்கான இணைய வழிப் பயிற்சி ஆகியவற்றுக்கும் சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளலாம்:- மின்னஞ்சல் முகவரி: auction.hl@iifl.com. உதவி அழைப்பு எண்கள்: @1800 2672 499.
7. சொத்து தொடர்பான கேள்விகளுக்கும், சொத்து ஆய்வுக்கும் இணைய வழி ஏல முதலான விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய IIFL HFL இலவச அழைப்பு எண்: 1800 2672 499, 09:30 மணிக்கும் 18:00 மணிக்கும் இடையில், திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை அல்லது மின்னஞ்சல் : auction.hl@iifl.com
8. மேற்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் நேரடி சுவாதீனம் செய்தபொழுது கடனீட்டுச் சொத்தில் வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் ஏதேனும் அடங்கியிருந்தால் அதனை 7 நாட்களுக்குள் எடுத்துக் கொண்டு விட வேண்டும். தவறினால் வரக்கூடிய சூழ்நிலைகள் காரணமாக ஏதேனும் சொத்து இழப்பு ஏற்பட்டால் அதற்கு IIFL-HFL பொறுப்பாகாது.
9. மேலும் இதன் மூலம் கடன்தாரர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், மேற்கண்டவாறு பொருட்களை எடுத்துக் கொள்ள அவர்கள் தவறினால் சட்டப்படி அவையும் சேர்த்து விற்பனை செய்யப்படும்.
10. வெற்றி பெற்ற ஏலதாரர் / ஏல வாங்குநர் எந்தக் கட்டத்திலாவது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தொகையைச் செலுத்தத் தவறினால் விற்பனையானது ரத்துச் செய்யப்பட்டு ஏற்கெனவே அவர் செலுத்திய தொகை (டேவணித்தொகை உட்பட) பறிமுதல் செய்யப்படுவதோடு சொத்தானது மீண்டும் ஏலத்துக்குக் கொண்டு வரப்படும்.
11. எந்தக் காரணமும் தெரிவிக்காமல் விலைகோரலை / ஏலத்தைத் தள்ளி வைக்க / ரத்துச் செய்ய அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றில் மாற்றம் செய்ய அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமை உண்டு. விலைகோரலில் / ஏலத்தில் ஏதேனும் சிக்கல் எழுந்தால் IIFL-HFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரது முடிவே இறுதியானது.

**SARFAESI சட்டம் 2002, விதி 9, உள்விதி (1)-இன் கீழான 15 நாள் விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் கடன்தாரருக்கு அறிவிப்பது யாதெனில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை நாளது வரையிலான வட்டி மற்றும் துணைச் செலவுகள் ஆகியவற்றுடன் விலைகோரல் / ஏல நாளுக்குள் செலுத்தி விட வேண்டும். தவறினால் சொத்து ஏலமிடப்பட்டு / விற்கப்பட்டு நிலுவை ஏதேனும் பாக்கியிருப்பின் அது வட்டி மற்றும் செலவினத்துடன் திரும்பப் பெறப்படும்.

இடம்: சென்னை, நாள்: 30.03.2024

ஓம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

**அசையாச் சொத்துக்களின் E-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு இந்தியா இன்ஃபோலைன் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., என அறியப்பட்டது) (IIFL-HFL) எனும் மனை எண் 98, உத்யோக் விகார், கட்டம்-IV, குர்கான்-122015 (அரியானா) எனும் முகவரியில் பெருநிறுவன அலுவலகத்தையும் 3ஆவது தளம், எண் 41, 1ஆவது பிரதான சாலை, CIT நகர், சென்னை-600 032 எனும் முகவரியில் [illegible]

| கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) | கோரிக்கை அறிவிப்பு நாளும் தொகையும் | அசையாச் சொத்தின் / கடனீட்டுச் சொத்தின் விவரம் | நேரடி சுவாதீன நாள் | குறைந்தபட்ச விலை | சொத்து ஆய்வு நாள் |
|---|---|---|---|---|---|
| 1. திரு. பிரகாஷ் S, 2. திருமதி தனலக்ஷ்மி ஆறுமுகம் (வாடிக்கையாளர் எண் 770532) | 10.02.2023 ரூ.19,56,565/- (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐந்நூற்று அறுபத்தைந்து மட்டும்); ஏல உயர்வுத் தொகை ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) | இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அடுக்கக எண் F6, நிலத்தின் பரப்பளவு 332.50 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு 595 சதுர அடி, 1ஆவது தளம், பிளாக் 1, அருண் [illegible] - மஞ்சரி, [illegible] கிராமம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 602105. | 12.03.2024; 05.03.2024 நாளன்படி மொத்த நிலுவைத்தொகை ரூ.23,76,125/- (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து எழுபத்தாறாயிரத்து நூற்று இருபத்தைந்து மட்டும்) | ரூ.18,09,000/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்); டேவணித் தொகை (EMD) ரூ.1,80,900/- (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) | 26.04.2024 1100 மணி - 1400 மணி; டேவணித் தொகைக்கான கடைசி நாள் 29.04.2024 - மாலை 5 மணி; E-ஏல நாளும் நேரமும் 02.05.2024 1100 மணி - 1300 மணி |

பணம் செலுத்தும் முறை: EMD கட்டணங்களை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். பணம் செலுத்த நீங்கள் https://www.iiflonehome.com ஐப் பார்வையிடவும் [illegible]

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. E-ஏலத்தில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள ஏலதாரர்கள் சேவை வழங்குநரின் https://www.iiflonehome.com இணையத்தளத்தில் முன்கூட்டியே தங்கள் விவரங்களைப் பதிவு செய்து [illegible]
2. ஏலதாரர்கள் தங்கள் விலைகோரலை "ஏல உயர்வுத் தொகை" எனும் பத்தியில் குறிப்பிட்டுள்ள தொகையின் மடங்குகளில் உயர்த்திக் கோரலாம். ஏலத்தின் கடைசி 5 நிமிடங்களில் ஏலம் கோரப்பட்டால் ஏலம் முடியும் நேரம் தானாகவே 5 நிமிடங்கள் நீட்டிக்கப்பெறும்.
3. வெற்றி பெறும் ஏலதாரர் ஏல விலையில் 25% தொகையை (டேவணித்தொகை உட்பட) [illegible]
4. சொத்து தொடர்பாக எழும் செஸ் வரி, உரிய முத்திரைத் தீர்வை, கட்டணம் மற்றும் இதர சட்டப்படியான நிலுவைகள் [illegible]
5. ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்து e-ஏல விற்பனை நடைமுறையில் கலந்து கொள்ளும் முன்பு https://www.iiflonehome.com மற்றும் https://www.iifl.com/home-loans/properties-for-auction [illegible]
6. விருப்பமுள்ள ஏலதாரர்கள் மேலும் விவரங்களுக்கும் உதவி நடைமுறை [illegible] மின்னஞ்சல் முகவரி: auction.hl@iifl.com. உதவி அழைப்பு எண்கள்: @1800 2672 499.
7. சொத்து தொடர்பான கேள்விகளுக்கும், சொத்து ஆய்வுக்கும் [illegible] IIFL HFL இலவச அழைப்பு எண்: 1800 2672 499, 09.30 மணிக்கும் 18.00 மணிக்கும் இடையில், திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை அல்லது மின்னஞ்சல்: auction.hl@iifl.com
8. மேற்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் [illegible] IIFL-HFL பொறுப்பாகாது.
9. மேலும் இதன் மூலம் கடன்தாரர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், மேற்கண்டவாறு பொருட்களை எடுத்துக் கொள்ள அவர்கள் தவறினால் சட்டப்படி அவையும் சேர்த்து விற்பனை செய்யப்படும்.
10. வெற்றி பெற்ற ஏலதாரர் / ஏல வாங்குநர் எந்தக் கட்டத்திலாவது [illegible]
11. எந்தக் காரணமும் தெரிவிக்காமல் விலைகோரலை / ஏலத்தைத் தள்ளி வைக்க [illegible]

**SARFAESI சட்டம் 2002, விதி 8(6)-இன் கீழான 30 நாள் விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் கடன்தாரருக்கு அறிவிப்பது யாதெனில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை [illegible]

இடம்: சென்னை, நாள்: 30.03.2024

ஓம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்